2012 ஏப்ரல் 26]

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தின்போது விவசாயப் பயிர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டங்களை அரசு வழங்குகின்றபோது, அது எந்த வகையிலும் விவசாயிகளுக்கு உபயோகம் இல்லாமல் போகிறது. குறிப்பாக, வாழை மரங்கள் எல்லாம் இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்படுகின்றபோது அரசாங்கம் மூன்று ரூபாய்தான் ஒரு மரத்திற்குத் தருகிறது. அது எந்த வகையில் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து முடிக்கிறேன். வணக்கம்.

(இ) நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் பெய்த ஆலங்கட்டி மழையால் ஏற்பட்ட சேதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் மாதம் 31 ஆம் தேதி நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் பெய்த ஆலங்கட்டி மழையினால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எப்போதும் ஆலங்கட்டி மழையிலேயே இருக்கிறீர்கள். உட்காருங்கள். அதை நீங்கள் தனியாகக் கொடுத்திருக்கிறீர்கள். இப்போது சூறாவளி குறித்துதான் அமைச்சர் பதிலுரை வைத்திருக்கின்றார். ஆலங்கட்டி மழை பற்றி தனியாக எடுத்துக்கொள்வோம், உட்காருங்கள்.

(உ) சூறாவளிக் காற்றால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு நிவாரணம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

முற்பகல் 11–10

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியத்தில் சமீபத்தில் அடித்த காற்றினால் அறுவடைக்குத் தயாரான 1,25,000–க்குமேல் வாழை மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதை தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2012 ஏப்ரல் 26

(இ) நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் பெய்த ஆலங்கட்டி மழையால் ஏற்பட்ட சேதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே பல பகுதிகளிலே வீடுகள் சேதமடைந்திருக்கின்றன. காய்கறிகள், கொய் மலர், தேயிலை போன்ற அனைத்தும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பயிர்களின் இரண்டு அடிக்கு மேலே பனி மூடியிருக்கிறது. அதை அப்புறப்படுத்துவதற்கே பெரும் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்து, இதன்மீது உரிய ஆய்வு செய்து நிவாரணம் வழங்குவதற்கு முன்வருவாரா என்று கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன் அவர்கள்.*

திரு. புத்திசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான உதகை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஹுல்லத்தி, கடநாடு, எப்பநாடு போன்ற வருவாய்க் கிராமங்களில் கடந்த மாதம் பெய்த ஆலங்கட்டி மழையில் சுமார் 500 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த தேயிலைச் செடிகளும், 600 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த கேரட், பீட்ரூட், முட்டைகோஸ் போன்ற விவசாயப் பயிர்களும் கடுமையாக சேதமடைந்திருக்கின்றன. கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு அந்தப் பகுதியிலே விவசாயமே செய்ய முடியாத அளவிலே மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். விவசாயத்தையே நம்பி வாழும் அப்பகுதி மக்களுக்கு அரசு ஏதாவது நிவாரணம் வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

(உ) சூறாவளிக் காற்றால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு நிவாரணம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*